**தலைப்பு 119 - மின்வலு மற்றும் எரி சக்தி அமைச்சின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளில் அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுவான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்புக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மின்வலு மற்றும் எரி சக்தி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (ஆ) மொத்த ஏற்பாடும் செலவினமும்

மின்வலு மற்றும் எரி சக்தி அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 32,311.41 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 24,286.79 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய ஏற்பாட்டில் ரூபா 8,024.62 மில்லியன் அல்லது 24.84 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 183.90 | 179.98 | 3.92 | 2.13 |
| மூலதனம் | 32,127.51 | 24,106.81 | 8,020.70 | 24.97 |
| மொத்தம் | 32,311.41 | 24,286.79 | 8,024.62 | 24.84 |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 11901 | 4.50 | 3.33 | 2.30 | 3.37 | 17.50 | 9.789 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

6000/0000/000/0015/0032/0000 ஆம் இலக்க அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி ரூபா 97,545 ஆகும்.

**2.4 கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 7002/0000/00/0038/0014/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 22,179,960 ஆக காணப்பட்டது.

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் இவ்வறிக்கையின் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைளிலுள்ள அவதானிப்புக்களிற்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 119 - மின்வலு மற்றும் எரி சக்தி அமைச்சு**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,230.70 மில்லியன் தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 36 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச் செலவினங்களிற்கான தேறிய ஏற்பாட்டில் 6 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டில் 3 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அச் செலவின விடயங்களிற்காக 2014 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 411.5 மில்லியன் நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**3.2 கட்டுநிதிக் கணக்கு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக பதவிநிலையற்ற 19 உத்தியோகத்தர்களிற்கு 102 சந்தர்ப்பங்களில் ரூபா 6,326,321 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கருமம் நிறைவேற்றப்பட்டவுடன் பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதிகளை தீர்க்க வேண்டிய போதிலும், 23 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 1,283,957 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு குறித்த கருமம் முடிவுற்று 1 மாதம் முதல் 7 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு தடவையில் வழங்கப்பட முடியுமான உச்ச செயல்நிமித்த உப கட்டுநிதித் தொகை ரூபா 20,000 ஆன போதிலும், அந்த பிரமாணத்திற்கு முரணாக 24 சந்தர்ப்பங்களில் 7 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 25,832,452 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**3.3 வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டம்**

மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டு நிதியளித்தலின் கீழ் 27 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் அமைச்சுக்கு ரூபா 21,615,470,000 ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 14,444,161,057 தொகை மாத்திரம் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச் செயற்திட்டங்களிடையே 03 செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) நிலைபேறான எரிசக்தித் துறை உதவிச் செயற்திட்டம்**

இச் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் கீழ் நிலத்தினை தோண்டும் உபகரணமொன்றும் (Digger Derrick) மற்றும் 02 போர்க் லிப்ட்களையும் (Pork Lift) கொள்வனவு செய்கையில் துறைமுக தாமதக் கட்டணமாக ரூபா 1,778,246 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இச் செயற்திட்டத்திற்கான 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அந்த நிதிக்கூற்றுக்கள் 3 மாத

தாமதத்தின் பின்னர் 2015 யூலை 02 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(iii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலத்தில் சரியாக அரைவாசிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், அச் செயற்திட்டத்திற்கான மதிப்பீட்டுக் கிரயத்தில் ஏறத்தாழ 1.2 சதவீத பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(iv) செயற்திட்டத்தின் புதிய காலி மின்சார பரிமாற்ற அபிவிருத்தி கூறின் கீழ் காலி கிரிட் உப மின்நிலையத்தை தாபித்தல் மற்றும் அம்பலாங்கொடை முதல் காலி வரை பரிமாற்றல் கம்பிகளை நிர்மாணித்தல் தொடர்பான பௌதீக செயன்முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 சதவீதத்திற்கும் மேலாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், வடக்கு கிழக்கு மின்சக்தி பரிமாற்ற அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கிரிபத்கும்புர கிரிட் உப மின்சார நிலையத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் ஊவா மாகாணத்தின் விநியோக முறைமையினை வலுப்படுத்தலின் கீழ் ஹல்தும்முல்ல மற்றும் ராகலை மத்திய வொலிரியானா விநியோக முறைமையினை பொருத்தும் நடவடிக்கைகளும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் மந்தகரமான செயன்முன்னேற்றத்தையே காட்டியிருந்தன. அத்துடன், "ரிஎக்டிவ் பவர் மெனேஜ்மன்ட்" (Reactive Power Management) கூறின் கீழ் அனியகந்த, அம்பலங்கொட மற்றும் கட்டுநாயக்கா உப மின்சார நிலையங்களின் நட்டத்தினை குறைப்பதற்கான "MV breaker switched capacitor bank" இனை பொருத்துவதற்கான கொள்வனவுகள் மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, கிழக்கு மாகாணத்தின் விநியோக இயலளவு அபிவிருத்தி தொடர்பான கூறின் கீழ் வழங்கப்பட்டிருந்த 03 மோட்டார் வாகனங்கள் செயற்திட்டத்தினால் பின்னர் மறுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(v) இலங்கை மின்சார சபை பொறுப்பேற்றிருந்த சகல வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்களுக்கும் பொறுப்பாகவுள்ள இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டம்) விடயப்பரப்பின் கீழ் செயற்திட்டத்தின் 7 மற்றும் 8 ஆம் பகுதிகள் உள்ளடங்கியிருக்கவில்லை. ஆகையால், இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 8 ஆம் பகுதியின் செயற்பாடுகள் தொடர்பில் ஒட்டுமொத்த கண்காணிப்பு முறையாக இடம்பெற்றிருக்கவில்லை.

(v) இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களிற்கான ரூபா 2.05 மில்லியன் தொகையான முற்பணங்களிலிருந்து 10 சதவீதத்தினையும் ரூபா 8.19 மில்லியன் சுங்கக் கட்டணத்தினையும் ஒப்பந்த காரரிடமிருந்து அறவிடுவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அவை தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்காமையால் பின்னர் மறுக்கப்பட்டிருந்தன.

**(ஆ) தூய மின்வலு மற்றும் வலைப்பின்னல் மேம்படுத்தல் செயற்திட்டம்**

இச் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹோமாகம மற்றும் அம்பகமுவ கோரலை பிரதேச செயலக அலுவலகங்களிற்கு பாதுக்கை மற்றும் பொல்பிடிய போன்ற இடங்களில் உப மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக இரண்டு காணித் துண்டுகளை கையேற்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 25.44 மில்லியன் வைப்பு, நடைபெற்றுவரும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்பான ரூபா 388.30 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 212.73 மில்லியன் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த வேறுபாடு தொடர்பில் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் நில அளவைகள் கிரயமான ரூபா 3.29 மில்லியன் தொகை காணிகளின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக நானாவித செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயற்திட்டத்தின் வரைபு நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 18 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(v) இலங்கை மின்சார சபையினால் 06 வகுதிகளின் கீழ் அதன் குறிக்கோள்களான முழுமையான உட்கட்டமைப்பு வசதிகள் விநியோகத்தை வலுப்படுத்தல் மற்றும் வலைப்பின்னல் செயலாற்றலையும் விநியோகத்தினையும் மேம்படுத்தல் என்பவற்றிற்காக செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டிருந்தன. மன்னார், பொல்பிடிய, பாதுக்க மற்றும் கேகாலை உப மின் நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் பொருத்துதல், பியகம, கொலன்னாவ மற்றும் சப்புகஸ்கந்த சேமிப்பகங்களில் ‘‘பிரேகர் சுவிச் கெபசிடர்ஸ்’’ (breaker switch capacitors)

பொருத்துதல், கெபிதிகொல்லேவ, கஹடகஸ்திகிலிய, கலஹ மற்றும் அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் பொருத்துல் என்பவற்றை செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், அனைத்து வகுதிகளினதும் பிரதான செயற்பாடுகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயற்திட்டத்தின் முதலாம் வகுதியின் தொகுதி ஏ இன் கீழ் மன்னார் உப மின் நிலையத்தின் நில அளவை நடவடிக்கைகள் மற்றும் அந்த வகுதியிலேயே பரிமாற்ற வீதி அளவை லொட் பீ இன் கீழான 1½ ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2015 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

- காணிகளை கையேற்றல் மற்றும் கொள்வனவு நடைமுறைகளின் தாமதங்கள் காரணமாக செயற்திட்டத்தின் இரண்டாவது வகுதியின் கீழான பரிமாற்ற மற்றும் விநியோக வலைப்பின்னல் செயலாற்றலை மேம்படுத்துவதுடன் தொடர்புடைய சகல கருமங்களும் மந்தமான செயன்முன்னேற்றத்தை காண்பித்திருந்தன.

- மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழான பாதுக்க மின்வலு பரிமாற்ற அபிவிருத்தியினதும் 4 ஆவது பிரிவின் கீழான கேகாலை மின்வலு பரிமாற்ற அபிவிருத்தியினதும் நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் அதாவது நிர்மாண வேலைகள் மற்றும் பரிமாற்ற நடவடிக்கைகளிற்காக காணிகள் நில அளவையிடப்பட்டவாறு காணப்பட்டன.

(vi) செயற்திட்டத்தின் நேரடிப் பொறுப்பு இலங்கை மின்சார சபைக்கு தனி ஒரு அலகாக முழுமையாக ஒப்படைக்கப்படாதிருந்தமையால், காலரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் மற்றும் பொருத்தமான கண்காணித்தல் முறையொன்றை செயற்படுத்துவதற்கும் செயற்பாட்டுக் காலத்தினுள் இலங்கை மின்சார சபை உத்தரவாதமளித்திருக்கவில்லை.

(vii) பெறக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, சிவில் வேலைகளிற்கான ஒப்பந்தங்கள் ‘‘டர்ன் கீ’’ ஒப்பந்தங்களாக கைளிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் அமுலாக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் தொடர்பான பௌதீக செயன்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| **செயற்பாடுகள்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயன்முன்னேற்றம்** |
|---|---|
| ❖ **எரிசக்தி செயலாற்றலை மேம்படுத்தல்** | |
| - **முறைமைக் கட்டுப்பட்டினை நவீனப்படுத்தல்** தொகுதி 01- முறைமைக் கட்டுப்பாட்டு நிலைய நிர்மாணம் | ஆரம்ப திட்டமிடல் வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. |
| - தொகுதி 02- தொடர்பாடல் முறைமையினைப் பொருத்துதல் | ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முடிவுற்றிருக்கவில்லை. |
| ❖ **பரிமாற்ற முறைமையினை வலுப்படுத்தல்** | |
| - தொகுதி ஏ 01 – நிர்வாக கட்டிட நிர்மாணம் | நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| - தொகுதி ஏ 02 – மேலதிக ஒப்பந்தம் | ஆரம்பகட்ட மற்றும் பொறியியல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| - தொகுதி ஏ 03 – டிரான்ஸ்போமருக்காக அஸ்திவாரம் நர்மாணித்தல் | நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. |
| - புத்தளம் - மாஹோ பரிமாற்ற கம்பி தொடர்பான வேலை பரப்பெல்லையினை முன்னேற்றுதல் | நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. |

| | |
|---|---|
| ❖ **விநியோக உப நிலையங்களை அதிகரித்தல்**<br>கட்டுநாயக்க, நாவல, கிரிபத்கொட, கொடிகாவத்த மற்றும் ஹிக்கடுவ உப நிலையங்களின் இயலளவினை அதிகரித்தல் | பரப்பெல்லையினை மாற்றியமைத்தமை, கூறுவிலை ஆவணங்களிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாதமத் காரணமாக வேலைகள் 2014 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ❖ **மாநகர சபைகளின் வீதி அலங்கரிப்புக்கான கேள்வி முகாமைத்துவம்** | பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| ❖ **உசாத்துணை சேவைகள்** | உசாத்துணையாளர்கள் 2014 திசெம்பர் 31 வரை தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| ❖ **வறியோர்களிற்கான நுழைவு** | |
| - கிழக்கு மாகாண பிறப்பாக்கல் முறைமையினை பலப்படுத்தல் | தேவையான உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |
| - கிராமிய வதிவிடங்களிற்கான இணைப்புக்கள் | பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வீட்டுடமையாளர்களிற்கு 1,334 கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 15 | 13 | 02 |
| (ii) மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) இரண்டாம் நிலை | 111 | 43 | 57 |
| (iv) ஆரம்ப நிலை | 46 | 45 | 01 |
| (v) ஏனையோர் (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 02 | 13 | - |
| மொத்தம் | 178 | 115 | 63 |

**(ஆ) வேறு தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் வெற்றிடமாக காணப்பட்ட பதவியணியினருக்குப் பதிலாக கீழே விபரிக்கப்பட்டவாறு பல்வேறு துறைகளைச் சார்ந்த 52 நபர்களை உள்ளடக்கிய பதவியணியினர் தமது பணிகளை நிறைவேற்றுவதற்காக வெளி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர்.

| **வெளித்தரப்பு** | **எண்ணிக்கை** |
|---|---|
| இலங்கை மின்சார சபை | 40 |
| வ/ப. இலங்கை மின்சார (தனியார்) கம்பனி | 01 |
| கஹவத்த ஆரம்ப பாடசாலை | 01 |
| இலங்கை நியமங்கள் நிறுவனம் | 06 |
| தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணு சக்தி அமைச்சு | 03 |
| தேசிய இளைஞர் படை | 01 |
| **மொத்தம்** | **52** |